இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம்

---

[1991 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 17 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1991 ஆம் ஆண்டு செப்தெம்பர் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ; ரூபா 2.40 தபாற் செலவு ரூபா : 1.55

# 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம்

[1991, செப்தெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 79/90

வசுவண்டி மூலம் பயணப் போக்குவரத்து தொடர்பிலான தேசியக் கொள்கைமீது அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குவதற்கும் அத்தகைய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், பொதுத்துறையில் வசுவண்டிமூலம் பயணப் போக்குவரத்தை மீள ஒழுங்கமைப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; குறித்தசில பயணப் போக்குவரத்து சேவைகளுக்கு நிதியுதவியை ஏற்பாடுசெய்வதற்கும்; 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டத்தை நீக்குவதற்கும்; 203 ஆம் அத்தியாயமான மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றுக்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கை அரசாங்கத்தின் கொள்கையானது— முன்னுரை.

(அ) வசுவண்டிமூலம் பயணப் போக்குவரத்து தொடர்பான சேவைகளின் சொத்தாண்மையும் செயற்பாடும் முற்றாகத் தனியார் துறைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், எந்த அரச நிறுவனத்தில், மாகாண சபையில் அல்லது உள்ளூரதிகார சபையில் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவில் அரசு, ஒரு மாகாண சபை அல்லது உள்ளூரதிகாரசபை பங்குகளைக் கொண்டிருக்கின்றதோ அந்த அரச நிறுவனம், மாகாண சபை அல்லது உள்ளூரதிகாரசபை அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு எதுவும் அத்தகைய சேவைகளை வழங்கும் ஏதேனும் அத்தகைய குழுவை இப்பொழுது அரசு சொந்தமாக வைத்திருக்குமிடத்து அல்லது ஏதேனும் அக்கறையைக் கொண்டிருக்குமிடத்து அது அத்தகைய அக்கறையைக் கொண்டிருப்பதிலிருந்து சாத்தியப்படக்கூடியவாறான விரைவில் தன்னை உரித்துநீக்கம் செய்தல் வேண்டுமென்பதும்;

(ஆ) பொதுமக்களின் தேவைகளை நிறைவுசெய்வதற்குப் போதுமான அளவிலும் தரத்திலுமான வசுவண்டிமூலம் பயணப் போக்குவரத்துத் தொடர்பிலான சேவைகளை ஊக்குவித்தலும் அபிவிருத்திசெய்தலும்; அத்துடன் இலங்கை முழுவதும் அத்தகைய சேவைகளை சமமாகப் பகிர்ந்தளித்தலும்;

(இ) சமூகரீதியில் அவசியமானவையும் ஆனால் ஆதாயமற்றவையுமான பாதைகளில் வசுவண்டிமூலம் பயணப் போக்குவரத்து தொடர்பிலான போதியளவு சேவைகளின் செயற்பாட்டை ஏற்பாடு செய்தலும்;

(ஈ) அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்பவர்களிடையே நலமார்ந்த போட்டியை உறுதிசெய்தலும்,

ஆக இருப்பதால் :

இப்பொழுது, ஆதலால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவைத் தாபித்தலும் அதன் தத்துவங்களும் பணிகளும்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு.

2. (1) (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அது அப்போதைக்கு 3 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவினுல் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருதல் வேண்டுமென்பதுடன், இடையரு வழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

3. (1) ஆணைக்குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பதவிநிலை உறுப்பினர்கள் மூவர், அதாவது—

(i) அமைச்சரது அமைச்சின், அத்தகைய அமைச்சரால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட உதவிச் செயலாளர் தரத்திற்குக் குறையாத சிரேஷ்ட அலுவலர் ஒருவர்;

(ii) கொள்கைத் திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சருடனை கலந்தாலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்பட்ட, கொள்கைத் திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரது அமைச்சின் பணிப்பாளரொருவரின் தரத்திற்குக் குறையாதவரான சிரேஷ்ட அலுவலர் ஒருவர்;

(iii) நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சருடனை கலந்தாலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்பட்ட, நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரது அமைச்சின் பணிப்பாளர் தரத்துக்குக் குறையாதவரான சிரேஷ்ட அலுவலர் ஒருவர்; அத்துடன்

(ஆ) போக்குவரத்து, பொருளாதாரம், மருத்துவம், நிருவாகம் அல்லது பொறியியல் போன்ற துறைகளில் அனுபவம் கொண்டிருந்த அல்லது அனுபவம் கொண்டுள்ள அல்லது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ள ஆட்களிடையேயிருந்து அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரால் நியமிக்கப்பட்ட வேறு ஐந்து உறுப்பினர்கள், இப்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இதனகத்துப்பின்னர் "நியமன உறுப்பினர்" எனக் குறிப்பிடுசெய்யப்படுவார்.

(2) ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது உறுப்பினரொருவராகவருமிடத்து அவர் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் சுகவீனம் காரணமாக, வலுவின்மை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து அவரது இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென, இப்பிரிவின் உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு அமைச்சரானவர் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(4) அமைச்சரானவர், அதற்கான காரணம் எதுவும் காட்டாமல் ஆணைக்குழுவின் உறுப்பினரெவரையும் அகற்றலானது, ஏதேனும் நீதி ஆணைக்குழுவின் உறுப்பினரெவரையும் அகற்றலானது, ஏதேனும் நீதி மன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(5) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின்மூலம் ஆணைக்குழுவிலிருந்து பதவி துறக்கலாம்.

(6) ஆணைக்குழுவின் நியமன உறுப்பினர்களது பதவிக்காலம் (4)ஆம் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

ஆயின், பதவி துறக்கின்ற அல்லது பதவியிருந்து அகற்றப்படுகின்ற அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினரொருவரின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நியமன உறுப்பினரொருவர் முன்னரே பதவி துறந்தாலன்றி அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் எந்த உறுப்பினருக்குப் பின்னுறுபவராக நியமிக்கப்பட்டாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறுதெஞ்சியிருக்கும் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) காலக் கழிவினால் பதவியை வறிதாக்குகின்றவரான ஆணைக்குழுவின் நியமன உறுப்பினர் எவரும் மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(8) (அ) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து ஆணைக்குழுவின் தவிசாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்;

(ஆ) தவிசாளரானவர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்;

(இ) அமைச்சரானவர், அதற்கான காரணம் எதுவும் காட்டாமல் தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுதலானது நீதிமன்றம் எதனிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது;

(ஈ) இவ்வுட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, தவிசாளரின் பதவிக்காலமானது ஆணைக்குழுவில் அவரது உறுப்பாண்மையின் காலப்பகுதியாதல் வேண்டும்.

(9) ஆணைக்குழுவானது, இவ்வுட்பிரிவால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவம் தவிர்ந்த இச்சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் அல்லது அவை எல்லாவற்றையும் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

தவிசாளரும் அலுவல்களை நடாத்துதலும்.

4. (1) தவிசாளர் எக்கூட்டங்களில் சமுகமாயிருக்கின்றாரோ அக்கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் அவர் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்குச் சமுகமளிக்காதபோது அக்கூட்டத்திற் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் அக்கூட்டத்திற்கெனத் தவிசாளர் ஒருவரை அவர்களிடையேயிருந்து தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்தாதல் வேண்டும்.

(3) தவிசாளர், ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் அவரது சொந்த வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கும் அமைய அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறையையும்; அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல் நடாத்தப்படுவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

வெற்றிடம் ஒன்றிருப்பினும் ஆணைக்குழு செயலாற்றலாம்.

5. ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றுளது அல்லது அதன் உறுப்பினர்கள் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுளது என்ற காரணத்தினால் மாத்திரம் அதன் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

ஆணைக்குழு உறுப்பினர்களின் வேதனம்.

6. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது அவர்களுள் எவருக்கும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனம் செலுத்தப்படலாம்.

7. (1) ஆணைக்குழுவின் இலச்சினை தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் இலச்சினை.

(2) ஆணைக்குழுவின் இலச்சினை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினை ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

8. ஆணைக்குழுவின் பணிகளாவன, வசுவண்டிமூலம் பயணப் போக்குவரத்துச் சேவை தொடர்பிலான தேசிய கொள்கைமீது அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும்; அத்துடன் அத்தகைய கொள்கையைக் கருத்திற்கொண்டு — ஆணைக்குழுவின் பணிகள்.

(அ) பொதுமக்களின் பயணப் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளத் தகுந்ததொரு தரத்திலான வசுவண்டிச் சேவை கிடைப்பதைக் கண்காணித்தலும், அத்துடன் அத்தகைய சேவைகள் பேணப்படவேண்டிய ஆகக்குறைந்த மட்டங்களைத் தீர்மானித்தலும்;

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது வெவ்வேறு கட்டணங்களில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லுவதற்குரிய வசுவண்டியொன்றின் பாவனைக்கு அதிகாரமளிக்கும் வேறு அதிகாரி பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை எந்த நிபந்தனைகளுக்கமைய வழங்கலாமோ அல்லது புதுப்பிக்கலாமோ அந்த நிபந்தனைகளைக் குறித்துரைத்தல்;

(இ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச் சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பயணப் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களின் நியதிகளுக்கு அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர்கள் இணங்கியொழுகுவதைக் கண்காணித்தலும் வலுவுக்கிடுதலும்;

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படக்கூடியவாறான படிவத்தை விதித்துரைத்தல்;

(உ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு அல்லது புதுப்பிக்கப்படுவதற்கு அறவிடப்படவேண்டிய வீதங்களைத் தீர்மானித்தல்;

(ஊ) பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான விண்ணப்பகாரர் ஒருவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டியதான வாகனத் தகுதிநிலை, பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய கொள்ளளவு, அத்துடன் சாரதியின் தகுதிநிலை, அத்துடன் வேறு சான்றுகள் என்பன தொடர்பிலான ஆவணங்களைக் குறித்துரைத்தல்;

(எ) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை யும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய விவரத்திரட்டுகளையும் தகவலையும் ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவுமாறு அதிகார மளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்ட, பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் வைத்திருப்போ ரைத் தேவைப்படுத்துதல்;

(ஏ) (i) தபால் கொண்டுசெல்லல்; அத்துடன்

(ii) பாடசாலைப் பிள்ளைகளுக்கு அத்துடன் பல்கலைக்கழகம், தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அதையொத்த நிறுவன மாண வர்களுக்குச் சலுகையளிக்கும் வீதங்களில் பாடசாலைச் சேவை களை வழங்குதல்;

உட்பட, அரசாங்கத் திணைக்களங்களுக்கும், நிறுவனங்களுக் கும் தேவைப்படுகின்ற சேவைகள் தொடர்பில் அத்தகைய திணைக்களங்களுடனும், நிறுவனங்களுடனும் அத்துடன் அதி காரமளிக்கப்பட்ட ஆட்களுடனும் தொடர்பை ஏற்படுத்துதல்;

(ஐ) குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பில் வசுவண்டிச் சேவைகளுக் கான பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங் களை வழங்குதல்;

(ஒ) அச்சேவைகளை வழங்குவதற்கு, போட்டிக் கேள்வுகளைக் கவனத் துக்கெடுத்துக்கொண்ட பின்னர், ஆட்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதன்மூலம் போதிய ஊதியம் அளிக்காத பாதைகளில் வசுவண்டிச் சேவைகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்; அத்துடன் அவசியமானவிடத்து அத்தகைய சேவை களை வழங்குகின்ற ஆட்களுக்கு நிதி உதவி வழங்குதலும், வழங் கப்படும் சேவைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, அத் தகைய ஆட்களினால் அறவிடப்படக்கூடிய பயணக் கட்டணங் களைக் குறித்துரைத்தலும்;

(ஓ) மாகாணங்களுக்கிடையிலான வசுவண்டிச் சேவைகளை வழங்கு வதற்காக எவரேனும் ஆளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளுதலும், அத்துடன் அது தொடர்பில் பயணப் போக்கு வரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும்;

(ஔ) அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கு முகாமைத்துவ நிபுணத் துவமும் உதவியும் வழங்குதல், அத்துடன் வசுவண்டிச் சேவை கள் வழங்குவது தொடர்பிலான தமது பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் உதவியை அல்லது ஆலோசனையை வழங்குதல்;

(க) வசுவண்டிகளிற் பொருட்கள் எடுத்துச்செல்லப்படுவதற்கான ஒழுங்கினைச் செய்தல்,

என்பனவுமாதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

9. ஆணைக்குழுவானது பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம் :—

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்வதற்கு, வைத்திருப்பதற்கு, எடுப்பதற்கு அல்லது குத்தகைக்குக் கொடுப்பதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்கு, ஈடுவைப்பதற்கு, அடகுவைப்பதற்கு, அத்துடன் விற்பதற்கு அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கு;

(ஆ) ஆணைக்குழுவின் வேலையைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஊழியத்தில் அமர்த்துவதற்கு;

(இ) ஆணைக்குழுவினால் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் திறமையை உயர்த்தும் நோக்கத்துக்கான எதையும் செய்வதற்கு;

(ஈ) ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் எனச் சகாய நிதியமொன்றைத் தாபிப்பதற்கு;

(உ) ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் நலன்புரி அத்துடன் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்கு;

(ஊ) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் நேரடியாகவோ அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்துகொள்வதற்கு அல்லது புரிவதற்கு;

(எ) ஆணைக்குழுவின் அலுவலர்கள், அத்துடன் சேவையாளர்கள் தொடர்பில், அவர்களின் நியமனம், பதவியுயர்ச்சி, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை அத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் லீவு உட்பட, விதிகளை ஆக்குவதற்கு;

(ஏ) பிரயாணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்கள், வசுவண்டிச் சேவைகள் வழங்குவது தொடர்பிலான பணிகளை அவர்கள் செவ்வனே நிறைவேற்றுவதை இயலச் செய்வதற்கு, அவர்களுக்குப் பொறியியல், தொழில்நுட்ப, சட்ட, மருத்துவ அத்துடன் நிதியுதவி அத்துடன் ஆலோசனை வழங்குவதற்கு;

(ஐ) ஆணைக்குழுவின் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கும் அத்துடன் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அவசியமென ஆணைக்குழு அபிப்பிராயப்படுகின்ற வேறு எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு.

ஆணைக்குழு தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.

10. (1) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் அத்துடன் பணிகள் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் எழுத்திலான அத்தகைய பொதுவான பணிப்புகளை விடுக்கலாம் என்பதுடன், ஆணைக்குழுவானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர், ஆணைக்குழுவின் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவது, அத்துடன் பணிகள் நிறைவேற்றப்படுவது தொடர்பிலான விபரத் திரட்டுக்கள், கணக்குகள், அத்துடன் வேறு தகவலை, அவர் தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் கொடுத்துதவுமாறு காலத் துக்குக்காலம் எழுத்தில் ஆணைக்குழுவைப் பணிக்கலாம் என்பதுடன், ஆணைக்குழுவானது அத்தகைய ஒவ்வொரு பணிப்பையும் நிறைவேற்றுத லும் வேண்டும்.

பணிப்புகள் வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்கள்.

11. (1) வசுவண்டிச் சேவைகள் வழங்குவது தொடர்பில் அதிகார மளிக்கப்பட்ட ஆட்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்திற் கும் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள், நிபந்தனைகளுடன் இணங்கியொழுகு கின்றனரா என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய அதிகார மளிக்கப்பட்ட ஆட்களினால் பயணப் போக்குவரத்துச் சேவை அனு மதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கும் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் கொள்கை மீது பொதுக்கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற் கும் அவசியமானதென ஆணைக்குழுவிற்குத் தோன்றுகின்றவாறான அத் தகைய எவையேனும் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை ஆணைக்குழு அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவருக்கும் விடுக்கலாம் என்ப துடன், அவ்வாறு பணிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும் அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், அத்தகைய அதி காரமளிக்கப்பட்ட ஆளின் செயற்பாடுகள் தொடர்பிலான தகவலைப் பெறுவதற்கு ஆணைக்குழுவுக்கு வசதிகள் அளித்தல் வேண்டும் என்பது டன், அச்செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப் படக்கூடியவாறான அத்தகைய விவரத்திரட்டுகளையும் கணக்குகளையும் அத்துடன் வேறு தகவலையும் ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய விதத்திலும், அத்தகைய நேரத்திலும் கொடுத்துதவப்பட்ட தகவலைச் சரிபார்ப்பதற்கு, ஆணைக்குழு தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய வசதிகளை ஆணைக்குழுவுக்கு அளித்த லும் வேண்டும்.

ஆணைக்குழுவுக்கெனக் காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல்.

12. (1) ஆணைக்குழுவின் நோக்கங்களுக்காக அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டு, அத்து டன், அமைச்சர், கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் உத்தேசிக் கப்பட்ட கொள்ளலுக்கு அங்கீகாரமளிக்கின்றவிடத்து, அவ்வாதனமா னது பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுகின்றதெனக் கருதப் படல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கக் காணி கொள்ளல் சட்டத் தின்கீழ் கட்டாயமாகக் கொள்ளப்பட்டு ஆணைக்குழுவுக்கு மாற்றப்படு தலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவுக்கெனக் காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படுவதற்குச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகை எதுவும் ஆணைக்குழுவினால் செலுத்தப்படல் வேண்டும்.

ஆணைக்குழுவுக்கு அரச ஆதனம் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.

13. (1) அரசுக்குச் சொந்தமான அசைவற்ற ஆதனம் எதுவும் ஆணைக்குழுவின் அலுவலின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கமானது, அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்துக்கு விசேட மானியக்கொடை ஒன்று அல்லது குத்தகை ஒன்று செய்யப்படக்கூடிய நோக்கமொன்று எனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அத்தகைய ஆதனம் விசேடமாக வழங்கப்படுதலுக்கு அல்லது குத்தகைக்கு விடப்படுவதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் நோக்கங்களுக்காக அரசுக்குச் சொந்தமான அசைவுள்ள ஆதனம் எதுவும் தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அவ்வாதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் ஆணைக்குழுவுக்கு மாற்றி உரித்தாக்கலாம்.

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

14. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கிணங்க, பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் அத்துடன் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க அலுவலர் எவரும், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து —

(அ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட நேரத்தில், பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவி, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின்கீழ் ஓய்வூதியத்திற்குரிய பதவியென வெளிப்படுத்தப்பட்ட ஒரு பதவியாக இருந்தால்—

(i) அவர் ஆணைக்குழுவின் ஊழியத்தில் இருக்கின்றபோது, பகிரங்க கொள்கையின் ஏதுக்களின் மீது வழங்கப்பட்ட சம்பளமில்லா லீவில் அவர் பகிரங்க சேவையில் கடமையாற்ற வராதிருந்தவராகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அக்குறிப்புக்களின் 10 (1) என்னும் பிரிவானது அவருக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்; அத்துடன்

(ii) அவர் தொடர்பில் ஆணைக்குழுவானது, அவர் அந்த ஆணைக்குழுவின் ஊழியத்தில் இருக்கின்ற ஒவ்வொரு முழு மாதத்துக்கெனவும் பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவியில் அவருக்குக் கொடுபடற்பாலதான சம்பளத்தில் இருபத்தைந்து சத வீதத்துக்கு மேற்படாததும், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியதுமான அத்தகைய பணத்தொகையை ஆணைக்குழுவின் நிதிகளிலிருந்து திரட்டு நிதியத்தில் வரவு வைப்பதற்கெனத் திறைசேரிக்குச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த காலத்தில், அவர். பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு உதவுநராக இருந்தால், ஆணைக்குழுவுக்கு அவர் ஆற்றிய சேவை, அந்தக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுகாக அரசாங்கத்துக்கு ஆற்றிய சேவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற் கிணங்க, அவர் ஆணைக்குழுவின் ஊழியத்தில் இருக்கின்ற காலத்தில், அந்தக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அவர் செலுத்துவ தற்கு ஆளாகியிருக்கக்கூடிய அத்தகைய உதவுதொகைகளைப் பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்குத் தொடர்ந்தும் செலுத்தி வருதல் வேண்டும்; அத்துடன் ஆணைக்குழுவானது அவர் தொடர்பில், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், அரசாங்கமா னது அவர் தொடர்பில் பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்த ஆளாகியிருக்கும் அத்தகைய உதவுதொகைக்குச் சம மான ஒரு பணத்தொகையைப் பகிரங்க சேவைச் சகாய நிதியத் திலுள்ள தோதான கணக்கில் வரவு வைப்பதற்கென ஆணைக் குழுவின் நிதியத்திலிருந்து திறைசேரிப் பிரதிச் செயலாளருக் குச் செலுத்துதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள ஓர் அலுவலர், ஆணைக்குழுவின் பணி யாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து—

(அ) அவர் பகிரங்க சேவையை விட்டு நீங்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நிய மிக்கப்பட்ட நேரத்தில், பகிரங்க சேவையில் அவர் வகித்த நிலை யான பதவி, ஓய்வூதியம் பற்றிய குறிப்புக்களின் கீழ் ஓய்வூதி யத்திற்குரிய பதவியாக வெளிப்படுத்தப்பட்ட ஒரு பதவியாக இருந்தால்—

(i) அவர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தர மாக நியமிக்கப்பட்ட தேதியில் பகிரங்க சேவையிலி ருந்து ஓய்வு கொடுக்கப்பட்டிருப்பின், அந்தக் குறிப்புக் களின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய அத்த கைய ஓர் அளிப்பைப் பெறத் தகுதியுடையவராதல் வேண்டும்;

(ii) அந்தக் குறிப்புக்களின் கீழ் வழங்கப்படும் அத்தகைய ஏதேனும் அளிப்பின் தொகையானது, ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியில் அவரது ஊழியமானது வயது காரணமாக, அல்லது உடனலமின்மை காரணமாக, அல் லது அவரால் வகிக்கப்பட்ட பதவி நீக்கப்பட்டமை காரணமாக, அல்லது பொது நிருவாகம் என்னும் விட யத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் அங்கீகரிக் கப்பட்ட வேறேதேனும் காரணமாக ஓய்வு கொடுத்தல் மூலம் முடிவுறுத்தப்பட்டிருந்தால் ஒழிய, அவருக்கு வழங்கப்படுதலாகாது; அத்துடன்

(iii) ஆணைக்குழுவின் ஊழியத்தில் இருக்கும்பொழுது அவர் இறந்தால், ஆணைக்குழுவின் பணியாட்டொருதிக்கு அவர் திருந்தால் அந்தக் குறிப்புக்களின் கீழ் அவர் தொடர்பில் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் இறந் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய ஓர் அளிப்பு, அவர் தொடர்பில் கொடுக்கப்படலாம்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் பணியாட்டொருதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட நேரத்தில் அவர் பகிரங்க சேவைச் சகாய நிதி யத்துக்கு உதவுநராக இருந்தால், அவர் அந்தக் கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, பதவியில் இருந்து நீக்கப்படுவதா லன்றி அரசாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தத்தை முடிவுறுத் தியதன்மேல் அரசாங்க சேவையை விட்டு நீங்கியவராகக் கரு தப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழு குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்துக்குச் சேவை செய்வதாக உடன்படும் ஓர் ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துள்ள ஓர் ஆள் ஊழியத்துக்கமர்த்துகின்றவிடத்து, அத்தகைய ஆளால் ஆணைக்குழுவுக்கு ஆற்றப்பட்ட எக்காலத்துக்குமான சேவையானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றிய சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல்.**

15. ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவானது இலஞ்சச் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல்.**

16. ஆணைக்குழுவானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

**விபரத்திரட்டுக்கள்.**

17. ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பாக, அத்தகைய கால இடைவெளிகளிலும் அத்தகைய படிவத்திலும் அத்தகைய விபரத் திரட்டுக்களையும் தகவலையும் ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவுமாறு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் அல்லது (ஒன்றில் அதிகாரமளிக் கப்பட்ட ஆளினாலோ அல்லது ஆணைக்குழுவினாலோ வழங்கப்பட்ட) பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றைக் கொண்டிருப்பவர் உட்பட எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

## பாகம் II

### அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பிலான தத்துவங்கள்

பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் மீதான கட்டுப்பாடு.

18. வசுவண்டியொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அரசு யின், மாகாண சபையொன்றுயின் அல்லது உள்ளூரதிகாரசபையொன்று யின் அல்லது எந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றில் அரசு, மாகாண சபையொன்று அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்று பங்குகளைக் கொண்டுள்ளதோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுயின், வெவ்வேறு கட்டணங்களுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அத்தகைய வசுவண்டியைப் பயன்படுத்துதற்கு அதிகாரமளிக்கின்ற பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமெதுவும் இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் வழங்கப்படுதலாகாது :

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், எந்த வசுவண்டியின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் மக்கள் மயமாக்கப்பட்ட கம்பெனியொன்றுக இருக்கின்றுரோ அந்த ஒரு வசுவண்டி தொடர்பில், பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுவதைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

மேன்முறையீடுகள்.

19. (1) பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரமொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கின்றவரான அல்லது அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை இல்லாதாக்குகின்றவரான அல்லது இடை நிறுத்துகின்றவரான அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் முடிவினுல் அல்லது எந்த நிபந்தனைகளுக்கமைவாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினுல் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டதோ அல்லது வழங்கப்படவேண்டும் எனப் பிரேரிக்கப்பட்டதோ அந்த ஏதேனும் நிபந்தனையால் இன்னலுறும் ஆளெவரும், எந்தத் தேதியன்று அத்தகைய முடிவு அத்தகைய ஆளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளினுல் தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து பதினுன்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய முடிவுக்கு எதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது, ஆணைக்குழுவானது—

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து அத்துடன் எந்த அதிகாரம் அளிக்கப்பட்ட ஆளின் முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட ஆளை அத்தகைய பயணப் போக்குவரத்துச்சேவை அனுமதிப் பத்திரத்தை வழங்கும்படி, புதுப்பிக்கும்படி அல்லது திருத்தும்படி பணிக்கலாம், அல்லது இடை நிறுத்துகை அல்லது இல்லாதாக்குகைக் கட்டளையை ஒழிக்கலாம்;

(ஆ) மேன்முறையீட்டை அனுமதிக்க மறுக்கலாம்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், (2)ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட பணிப்பு எதனுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது, அத்தகைய தவறுகைபற்றி உடனடியாகச் சனாதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை இல்லாதாக்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம்.

20. (1) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் வழங்கப்பட்ட பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருப்பவர், எந்த நிபந்தனைகளுக்கு அமைவாக அத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதோ அந்த நிபந்தனைகளை மீறுபவராகச் செயலாற்றியுள்ளார் என ஆணைக்குழு திருப்திப்படுகின்றவிடத்து, அது அதன் சொந்தப் பிரேரணை மீதும் அத்துடன் அத்தகைய அனுமதிப்பத்திரம் ஏன் இல்லாதாக்கப்படக்கூடாது அல்லது இடை நிறுத்தப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுவதற்கு அதனை வைத்திருப்பவருக்குச் சந்தருப்பம் அளித்தபின்னரும், அத்தகைய அனுமதிப்பத்திரத்தை இல்லாதாக்கலாம் அல்லது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு இடை நிறுத்தலாம். ஆணைக்குழுவானது அதன் முடிவை அதற்கான காரணங்களுடன் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவருக்குத் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அத்தகைய முடிவின் பிரதியொன்றை அனுப்புதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரமொன்றை இல்லாதாக்குகின்றதான அல்லது இடை நிறுத்துகின்றதான ஆணைக்குழுவின் முடிவினால் இன்னலுறும் ஆளெவரும், அத்தகைய முடிவுக்கெதிராக, அத்தகைய முடிவு அவருக்கு எந்தத் தேதியன்று தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) செயலாளரானவர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது—

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து அத்துடன், இல்லாதாக்கல் அல்லது இடைநிறுத்தல் முடிவை ஒழிக்குமாறு ஆணைக்குழுவைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டை அனுமதிக்க மறுக்கலாம் என்பதுடன், ஆணைக்குழுவின் முடிவை உறுதிப்படுத்தலாம்.

குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு தொடர்பில் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம்.

21. நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டதும், அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதுமான பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர, குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்குள்ளாக, வெவ்வேறு கட்டணங்களுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக ஆளெவரும் வசுவண்டியொன்றைப் பயன்படுத்துதலாகாது.

குறித்துரைக்கப்பட்ட இடப் பரப்புகளில் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரங்கள்.

22. பிரிவு 24ன் கீழ் வழங்கப்பட்டதான பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்று, அதனை வைத்திருப்பவர் எந்த வசு வண்டியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரராக இருக்கிறாரோ அந்த வசுவண்டி ஒன்றினை அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறான அத்தகைய மார்க்கத்தில் அல்லது மார்க்கங்களில் பயணிகளைக் கொண்டு செல்வதற்கென, அவ்வனுமதிப்பத்திரத்தில் இணைக்கப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கிணங்கப் பயன்படுத்துவதற்கு அவரை உரித்துடையவராக்குதல் வேண்டும்.

பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றுக்கான விண்ணப்பம்.

23. (1) பிரிவு 24ன் கீழ் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், எந்த வசுவண்டி தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகிறதோ அந்த வசுவண்டியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரால், விதித்துரைக்கப்படக் கூடியவாறான, அத்தகைய படிவத்தில் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப் பட்டதான அவரது விண்ணப்பத்துடன் சேர்த்து, விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் பின்வருவனவற்றைக் கொண்டுள்ள கூற்றொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) எந்த மார்க்கத்தில் அல்லது மார்க்கங்களில் அத்தகைய வசுவண்டியை வெவ்வேறு கட்டணங்களுக்குப் பயணிகளைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அந்த, மார்க்கத்தின் அல்லது மார்க்கங்களின் விபரங்கள்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவானது அதனது தத்துவத்தை 24 ஆம் பிரிவின் கீழ் பிரயோகிக்கும் நோக்கத்திற்குத் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களைக் கையாளுதல்.

24. பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பமொன்று பெறப்பட்டதன்மீது, ஆணைக்குழுவானது, விண்ணப் பத்தில் விண்ணப்பிக்கப்பட்ட மார்க்கத்தில் அல்லது மார்க்கங்களில் பொதுமக்களின் வசுவண்டிப் போக்குவரத்துச் சேவைக்கான தேவைப் பாடுகளைக் கருத்திற்கொண்டு, ஒன்றில் பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை வழங்கலாம் அல்லது, அத்தகைய அனுமதிப் பத்திரத்தை வழங்குதலானது விண்ணப்பிக்கப்பட்ட மார்க்கத்தில் வசு வண்டிக் கொள்ளளவு அளவுக்கதிகமாகப் பிரித்தொதுக்கப்படுவதாக அமையுமென அது திருப்திப்படின், அதனை வழங்கமறுக்கலாம்.

பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களின் காலநீடிப்பு, கட்டணம் முதலியன.

25. (1) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணம் ஆணைக்குழுவுக்கு எவரேனும் ஆளினால் கொடுப்பனவு செய்யப்பட்டாலன்றி, 24ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆள் எவருக்கும் ஆணைக்குழுவினால் பயணப்போக்குவரத்துச்சேவை அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) பிரிவு 24இன் கீழ் வழங்கப்பட்ட பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றும் —

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அது முன்னரே இல்லாதாக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறாக ஓராண்டுக்குக் குறையாததும் மூன்று ஆண்டுகளை விஞ்சாததுமான அத்தகைய காலப்பகுதிக்கு வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

பிரிவு 24 இன் கீழான அனுமதிப் பத்திரங்களுடன் இணைக்கப்படவேண்டிய நிபந்தனைகள்.

**26.** பிரிவு 24 இன் கீழ் வழங்கப்பட்டதான பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றுடனும், பொதுமக்களின் பாதுகாப்பினையும் வசதியினையும் உறுதிப்படுத்துவதற்கென ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா நிபந்தனைகளும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்தகைய நிபந்தனைகள் —

(அ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படுவதான வசுவண்டி, அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய மார்க்கத்திலும் அல்லது மார்க்கங்களிலும் அத்துடன் அதிற் குறித்துரைக்கப்பட்ட நேர அட்டவணைக்கிணங்கவும் தொழிற்படுத்தப்பட வேண்டும் என;

(ஆ) நேர அட்டவணை அத்துடன் பயணக்கட்டண அட்டவணை ஆகியனவற்றின் பிரதிகள், அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டியில் கொண்டுசெல்லப்படுதலும் வெளிக்காட்டி வைக்கப்படுதலும் வேண்டும் என;

(இ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டியானது எல்லா நேரங்களிலும் தகுதியானதும் சேவையிலீடுபடுத்தற்பாலதுமான ஒரு நிலைமையில் பேணப்படுதல் வேண்டும் என;

(ஈ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டிகளின் சாரதியினதும், நடாத்துநரினதும் விடயத்தில், வசுவண்டிகளின் சாரதிகள் அல்லது நடாத்துநர்கள் தொடர்ச்சியாகக் கடமையில் இருக்கக்கூடிய நேரம், அவர்களது வேலை அல்லது ஓய்வுநேரம், அத்துடன் அவர்களின் கூலிகள் தொடர்பிலான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுதல் வேண்டும் என,

தேவைப்படுத்துவதான நிபந்தனைகளை உள்ளடக்கலாம்.

அனுமதிப் பத்திரங்களில் அதிகாரமளிக்கப்பட்ட வசுவண்டியைக் குறித்துரைத்தல்.

**27.** பிரிவு 24 இன் கீழ் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றினை வழங்கும் நேரத்தில், ஆணைக்குழுவானது, எந்த வசுவண்டியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரத்தால் அதிகாரமளிக்கப்பட்டதோ அந்த வசுவண்டியை வேறுபடுத்திக்காட்டும் அதன் இலக்கத்தையும் அத்துடன், அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும் குறிப்பிடுவதன் மூலம் அதனகத்துக் குறித்துரைக்கலாம்.

அனுமதிப் பத்திரங்கள் கைமாற்றப்படற்பாலனவாதலாகாது

**28.** பிரிவு 24 இன் கீழ் எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமெதுவும் வேறெவரேனும் ஆளுக்குக் கைமாற்றப்படற்பாலதாதலாகாது என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய கைமாற்றமெதுவும் வெற்றானதும் வறிதானதுமாதலும் வேண்டும்.

அனுமதிப் பத்திரங்கள் வைத்திருப் போர் விவர மாற்றம் எதனையும் ஆணைக்குழு வுக்கு அறிவித்தல்.

29. (1) பிரிவு 24 இன் கீழ் வழங்கப்பட்ட பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருப்பவர், பயணப் போக்கு வரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றுக்கான அவரது விண்ணப்பத் தில் கூறப்பட்டுள்ள விவரங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம் எதனையும், அம் மாற்றம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களுள் அத்தகைய மாற்றம் பற்றி ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரமொன்றை வைத்திருப்பவர் அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் மூலம் வழங்க அதிகாரமளிக்கப்பட்டுள்ள வசுவண்டிச் சேவையினை தொடர்ந்துவரும் முப்பது நாட்கள் காலப்பகுதியொன்றுக்கு வழங்கத் தவறியுள்ளார் அல்லது வழங்குவதைப் புறக்கணித்துள்ளார் எனத் திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய வைத்திருப்போ ருக்கு அவர் விசாரிக்கப்படுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கிய தன் பின்னர் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை இல்லாதாக்கலாம்.

அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பித்தல்.

30. (1) ஆணைக்குழுவானது (2) ஆம் உட்பிரிவுக்கு அமையவும் அத்து டன் 24ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பயணப் போக்கு வரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட மார்க்கம் அல்லது மார்க்கங்களில் வசுவண்டிச்சேவைகளின் தேவைப்பாடுகளைச் சமாளிப்பதற்குப் போதிய வசுவண்டிச் சேவைகள் கிடைக்கக்கூடியமை யைக் கருத்திற்கொண்டும், அத்தகைய அனுமதிப்பத்திரத்தை, அது முடிவடையும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஓர் ஆண்டிற்கு குறை யாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமான அத்தகைய காலப்பகுதிக்கு, அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் புதுப்பிக்கலாம்.

(2) அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் —

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை அவதானிக்கவில்லையென;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் தவறுக்கு குற்றத் தீர்ப்பளிக் கப்பட்டுள்ளார் என;

(இ) அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கான விதித்துரைக்கப் பட்ட கட்டணத்தை செலுத்தவில்லை என,

ஆணைக்குழுவுக்குத் தோன்றினால், ஆணைக்குழுவானது 24 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்க மறுக்கலாம்.

அனுமதிப் பத்திர மொன்றை இல்லாதாக் குதல்.

31. (1) பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் —

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி யின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறியுள்ளாரென;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப் புடன் இணங்கியொழுகவில்லையென;

(இ) இச்சட்டத்தின் கீழ் அவரால் அனுப்பப்படும் ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது விவரத்திரட்டில், அல்லது ஏதேனும் எழுத்திலான விளக்கத்தில், தமது அறிவுக்கெட்டியவரை பொய்யானதாகவுள்ள அல்லது பிழையானதாகவுள்ள எவையேனும் விபரங்களைக் கொடுத்துதவியுள்ளாரென; அல்லது

(ஈ) அவரது அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள எவையேனும் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளாரென,

ஆணைக்குழுவானது திருப்திப்பட்டால், 24ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அல்லது 30ஆம் பிரிவின் கீழ் புதுப்பிக்கப்பட்ட பயணப்போக்குவரத்துச்சேவை அனுமதிப்பத்திரமெதனையும் அது இல்லாதாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றினை இல்லாதாக்குதலானது, ஆணைக்குழுவின் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான காலம் முடிவடையும்வரை, அல்லது மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தால் மேன்முறையீடு கேட்டுத்தீர்க்கப்படும் வரை, பயனுறுதலாகாது.

ஆணைக்குழு அதன் முடிபை அதற்கான காரணங்களுடன் விண்ணப்பகாரருக்கு அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருக்கு அறிவித்தல்.

32. ஆணைக்குழுவானது பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை வழங்க அல்லது புதுப்பிக்க மறுப்பதற்கு அல்லது ஒரு பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தை இல்லாதாக்குவதற்கு முடிவுசெய்துள்ளவிடத்து, அது, விடயத்துக்கேற்ப விண்ணப்பகாரருக்கு அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருக்கு அதனது முடிவை அதற்கான காரணங்களுடன் சேர்த்து எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

மேன்முறையீடுகள்.

33. (1) (அ) இருபத்து நாலாம் பிரிவின் கீழ் பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குவதற்கு அல்லது 30ஆம் பிரிவின் கீழ் அதனைப் புதுப்பிப்பதற்கு மறுக்கின்றதான; அல்லது

(ஆ) முப்பத்தோராம் பிரிவின் கீழ் பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை இல்லாதாக்குகின்றதான; அல்லது

(இ) எந்த நிபந்தனைகளுக்கமைய அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுகின்றதோ அல்லது வழங்க உத்தேசிக்கப்படுகிறதோ அந்த நிபந்தனைகளை விதிக்கின்றதான,

ஆணைக்குழுவின் முடிபொன்றினால் இன்னலுறுபவரான அந்தப் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பகாரர் அல்லது அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருப்பவர், எந்தத் தேதியன்று அவருக்கு அம்முடிபு அறிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அம்முடிபுக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) செயலாளரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது—

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து, அத்துடன் மேன்முறையீடு எந்தப் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பில் செய்யப்பட்டதோ அந்தப் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு அல்லது புதுப்பிக்குமாறு ஆணைக்குழுவுக்கு பணிப்பு வழங்கலாம்;

(ஆ) மேன்முறையீட்டை அனுமதிக்காதுவிடலாம்; அல்லது

(இ) அத்தகைய மேன்முறையீட்டின் மீதான அவரது முடிபுக்கிணங்க, அனுமதிப்பத்திரத்தைத் திருத்துமாறு அல்லது அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு ஆணைக்குழுவைப் பணிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது, (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

சான்றிதழானது வளித்தடுப்பு மீது வெளிக்காட்டி வைக்கப்படுதல்.

34. ஆணைக்குழுவானது 24 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வசுவண்டி தொடர்பிலும் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருக்குச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர், அத்தகைய வசுவண்டியில் ஏறுகின்ற எவரேனும் ஆளுக்குத் தெளிவாகத் தெரியக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய ஒவ்வொரு சான்றிதழையும், அச்சான்றிதழ் எந்த வசுவண்டி தொடர்பிலானதோ அந்த வசுவண்டியின் வளித்தடுப்புமீது வெளிக்காட்டி வைக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

## பாகம் III

### நிதி

ஆணைக்குழுவின் நிதியம்.

35. (1) ஆணைக்குழுவானது அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் நிதியத்துக்கு—

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(ஆ) ஆணைக்குழுவிற்கு, இச்சட்டத்தின் கீழ் அதனது தத்துவங்களை, பணிகளை அத்துடன் கடமைகளைப் பிரயோகிப்பதினால், புரிவதினால், நிறைவேற்றுவதினால் கிடைக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழு அதனது தத்துவங்களை, பணிகளை அத்துடன் கடமைகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் அதனால் உறப்பட்ட செலவுகளை ஈடுசெய்வதற்குத் தேவைப்படுகின்ற அத்தகைய பணத்தொகைகள் யாவும், அத்துடன் ஆணைக்குழுவின் நிதிகளிலிருந்து ஆணைக்குழுவினால் செலுத்தப்படல் வேண்டுமென இச்சட்டத்தின் கீழ்த் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய் பணத்தொகைகள் யாவும், நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

36. ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். நிதியாண்டு.

37. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையதாதல் வேண்டும். கணக்காய்வு.

38. (1) ஆணைக்குழு அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் அதனது கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கு அல்லது பணிகளைப் புரிவதற்கு ஆணைக்குழுவிற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை மேலதிகப் பற்றின் மூலம் அல்லது வேறு வகையாகத் தற்காலிகமாகக் கடன் வாங்கலாம். ஆயின், இவ்வுட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் பெறப்பட்ட ஏதேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பாக நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டு மொத்தத் தொகைகள் எந்நேரத்திலும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சுதலாகாது. ஆணைக்குழுவின் கடன் வாங்கும் தத்துவம்.

(2) ஆணைக்குழு, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அளிக்கப்பட்ட சம்மதத்துடன், பின்வரும் நோக்கங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அவற்றுள் ஏதேனும் நோக்கத்திற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ்த் தற்காலிகக் கடன் மூலமல்லாது வேறுவகையில் பணத்தைக் கடனாக வாங்கலாம் :—

(அ) தொழிற்படு மூலதனத்தை ஏற்பாடு செய்தல்;

(ஆ) ஏதேனும் நிரந்தரத் தொழில் அல்லது வேறு விடயங்கள் தொடர்பில் உறப்படுவதும் மூலதனத்தில் முறையாகச் சாட்டப்படற்பாலதானதுமான ஏதேனும் செலவுகளை ஈடுசெய்வதற்கான பணத்தை ஏற்பாடு செய்தல்;

(இ) ஆணைக்குழுவினால் பெறப்பட்ட ஏதேனும் கடனின் மீட்பு; அல்லது

(ஈ) ஓராம் உட்பிரிவின் கீழ்த் தற்காலிகமாகக் கடனாகப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தின் மீளக்கொடுப்பனவு உட்பட மூலதனப் பணம் எந்த நோக்கங்களுக்கு முறையாக ஏற்புடையதானதாகவுள்ளதோ அந்த ஏதேனும் வேறு நோக்கம்.

(3) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அளிக்கப்பட்ட சம்மதத்துடன், ஆணைக் குழுவானது, சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமானதென ஆணைக்குழு கருதுகின்றவாறான ஏதேனும் முறையில் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப் பட்ட எவையேனும் நோக்கங்களுக்காகப் பணத்தைக் கடனாகப் பெறலாம்.

## பாகம் IV
## பொது

**அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவர் களுக்குப் பணிப்புகள் வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்கு உள்ள தத்துவம்.**

39. (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் கீழ் அல்லது ஓர் அதி காரமளிக்கப்பட்ட ஆளினால் பயணப் போக்குவரத்துச் சேவை அனு மதிப்பத்திரம் எந்த ஆளுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அல்லது புதுப்பிக் கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆளுக்கு, இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுக ளுக்கு அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைக்கு அத்தகைய ஆளை இணங்கி ஒழுகச்செய்யும் நோக்கத்திற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புகளில் குறித் துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய பணிப்பு களுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய பணிப்புகள் எந்த ஆளுக்கு வழங்கப்பட்டுள்ளனவோ அந்த ஆளின் கடமையாதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எந்நேரத்திலும்—

(அ) அத்தகைய வசுவண்டியின் பயன்பாடு ஓர் அதிகாரமளிக்கப் பட்ட ஆளினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்தினால் அதி காரமளிக்கப்பட்டுள்ளதாவென அல்லது அத்தகைய அனுமதிப் பத்திரத்துடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என உறுதிப் படுத்தும் நோக்கத்திற்கென, பயணிகளைக்கொண்டு செல்வதற் குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வசுவண்டியினுள் உட்புக லாம்;

(ஆ) அத்தகைய வசுவண்டியின் ஓட்டுநரை, அந்த வசு வண்டி தொடர்பில் 34ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழை அல்லது அந்த வசு வண்டி தொடர்பில் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்த லாம்; அல்லது

(இ) அத்தகைய சான்றிதழை, வேறு ஆவணத்தை அல்லது அதன் பிரதியைக் கட்டுக்காப்பில் எடுக்கலாம்.

**தவறுகள்.**

40. (அ) ஆணைக்குழுவினால் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட ஏதே னும் பணிப்புக்கு அல்லது அத்தகைய ஆள்மீது விதிக்கப்பட்ட தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஆ) ஆணைக்குழுவினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தினைப் பிரயோகிப்பதை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற;

(இ) ஆணைக்குழுவால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது ஏதேனும் விபரத்திரட்டை, தகவலை அல்லது எழுத்து மூலமான விளக்கத்தைக் கொடுத்துதவுவதைத் தவிர்க்கும் அல்லது மறுக்கும்;

(ஈ) அவருடைய அறிவுக்கெட்டிய வரையில் பிழையான அல்லது தவறான தகவல்களைக் கொண்ட ஏதேனும் விபரத்திரட்டை, தகவலை அல்லது எழுத்துமூலமான விளக்கத்தை ஆணைக்குழுவுக்கு கொடுத்துதவும்; அல்லது

(உ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயற்படும்,

ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

41. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழு ஒன்றினால் புரியப்படும்போது— *ஆட்கள் குழுக்களினால் புரியப்படும் தவறுகள்.*

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாயின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளராக, பொது முகாமையாளராக, செயலாளராக அல்லது அவ்வாறான பிற அலுவலராக இருந்தவரான ஒவ்வோர் ஆளும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமம் ஒன்றாயின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுமத்தின் பங்காளராயிருந்தவரான ஒவ்வோர் ஆளும்,

தவறு அவரது அறிவுக்கெட்டாமலும் அவரது மறைமுக ஆதரவு இல்லாமலும் புரியப்பட்டதெனவும், அத்துடன் அவரது பணிகளினது தன்மையையும் எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்திற்கொண்டு பிரயோகிக்க வேண்டியவாறு தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தாரெனவும் எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும்.

42. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக ஆணைக்குழுவுக்கெதிராக; அல்லது *வழக்குக்கெதிரான பாதுகாப்பு.*

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மேல் அவரால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக,

வழக்கு அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடரப்படலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவர்களான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மேல் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் அவருக்கெதிராகத் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய நடவடிக்கை நன்னோக்கத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து கொடுபடல் வேண்டும்.

**அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் பணிகள் நிறைவேற்றப்படத் தவறுதல்.**

43. அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், வசுவண்டி மூலம் வீதிப் பயணப் போக்குவரத்து தொடர்பில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பின் கீழ் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணியை நிறைவேற்றத் தவறினால், ஆணைக்குழு உடனடியாக அத்தகைய தவறுகையைப் பற்றி சனாதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டும் என்பதுடன், எந்த இடப்பரப்புத் தொடர்பில் அப்பணிகள் நிறைவேற்றப்படலாமோ அந்த ஏதேனும் இடப்பரப்பில் தடைப்படாத வசுவண்டிச் சேவை ஏற்பாடு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தோதான நடவடிக்கையையும் மேற்கொள்ளலாம்.

**ஒழுங்குவிதிகள்.**

44. (1) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்குவதற்கு இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ, அக்கருமங்கள் தொடர்பிலும், அத்துடன் குறிப்பாக பின்வருவன தொடர்பிலும் அமைச்சரானவர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் கட்டுக்காப்பு, அத்துடன் இல்லாதாக்கும்போது அல்லது முடிவடையும் போது அல்லது இடைநிறுத்துகையின் போது அவற்றைச் சமர்ப்பித்தல் அல்லது திரும்ப ஒப்படைத்தல் அத்துடன் சான்றிதழ்களினதும் தகடுகளினதும் கட்டுக்காப்பு, சமர்ப்பிப்பு, திரும்ப ஒப்படைப்பு;

(ஆ) வசுவண்டிகளில் இருக்கவேண்டிய தகடுகளும் அடையாளங்களும் அத்துடன் அவை வெளிக்காட்டப்பட வேண்டிய முறையும்;

(இ) அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர்களால் வசுவண்டிகளின் ஓட்டுநர்களாகவும் நடாத்துநர்களாகவும் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்கள், அத்தகைய ஆட்கள் வேலையைத் தொடங்கும் அத்துடன் முடிக்கும் நேரங்கள், அவர்கள் ஓய்வுக்கென எடுக்கும் இடைவேளைகள் என்பன தொடர்பில் அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர்களால் வைத்திருக்கப்பட வேண்டிய பதிவேடுகள்;

(ஈ) வசுவண்டிகளின் ஓட்டுநர் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் அத்துடன் அவற்றில் பதியப்படவேண்டிய விபரங்கள்;

(உ) வசுவண்டிகளால் மேற்கொள்ளப்பட்ட பயணங்கள் தொடர்பாக வைத்திருக்கப்பட வேண்டிய பதிவேடுகள்;

(ஊ) அவ்வாறு வைத்திருக்கப்படும் பதிவேடுகளின் பேணல்கள், ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளினல் அத்தகைய பதிவேடுகள் பரிசோதனை செய்யப்படல் அத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களால் கேட்கப்படும் போது அத்தகைய பரிசோதனை நோக்கங்களுக்காக அத்தகைய பதிவேடுகளைச் சமர்ப்பித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறன அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின் வசதியாகக் கூடியளவு விரைவாக பாராளுமன்றத்தின் முன் அங்கீகாரத்துக்காகக் கொண்டு வரப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட எதற்கேனும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

**மக்கள் மயப்படுத்தப் பட்ட கம்பெனிகளை ஒடுக்குதல்.**

45. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரெண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் உள்ள எதனையும் கவனத்திற் கொள்ளாது, மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிமன்றம் ஆணைக்குழுவால் அதற்கென விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப் பகுதிக்கு தொடர்ச்சியாக வழங்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வசுவண்டிச் சேவைகளை அத்தகைய கம்பெனி வழங்கத் தவறியிருந்தால் அத்தகைய கம்பெனியை ஒடுக்குமாறு கட்டளையிடலாம். நீதிமன்றத்தால் கம்பெனிகள் ஒடுக்கப்படுவது தொடர்பிலான 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பாகம் I இன் ஏற்பாடுகள் அத்தகைய ஒடுக்குதலுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

**மத்திய போக்குவரத்துச்சபை மற்றும் பிரதேச போக்குவரத்து சபைகள் தொடர்பிலான ஏற்பாடு.**

46. (1) நியமித்த தேதியின் பின்னர் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அல்லது ஏதேனும் பிரதேச போக்குவரத்துச் சபையின் அல்லது அத்தகைய சபையின் ஏதேனும் பாகத்தின் பணிகளைக் கையேற்பதற்கென, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, 'பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதற் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, அச்சட்டத்தில் முரணானது, எது எவ்வாறிருப்பினும் —

(அ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கின்ற சபையினது எல்லாப் பொறுப்புகளும் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான சபையின் அத்தகைய பொறுப்புகளும் கட்டளையின் தேதியிலிருந்து அரசுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அரசின் பொறுப்புகளாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(ஆ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கின்ற, சபையால் செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான சபையின் அத்தகைய ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் கட்டளையின் தேதியிலிருந்து வலுவுடையதாகுமாறு அரசினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளுமாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று முடிவுறாதிருப்பனவையான சபையினால் அல்லது சபைக்கெதிராகத் தொடரப்பட்ட எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான சபையினால் அல்லது சபைக்கெதிராகத் தொடரப்பட்ட அத்தகைய வழக்குகளும் அல்லது வழக்கு நடவடிக்கைகளும் அரசினால் அல்லது அரசுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளாக அல்லது வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கக் கொண்டு நடாத்தவும் நிறைவு செய்யவும் படலாம்;

(ஈ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருப்பதான ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாய சபையில் சபையினால் அல்லது சபைக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான அத்தகைய ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஆக்கப்பட்ட அல்லது பதியப்பட்ட, பணக்கொடுப்பனவு தொடர்பிலான ஏதேனும் தீர்வை அல்லது நடுத்தீர்ப்பு அரசுக்கான அல்லது அரசுக்கு எதிரான ஒரு தீர்வையாக அல்லது நடுத்தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுக்கிடவும் படலாம்;

(உ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று சபையின் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பாகத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட அசைவற்ற எல்லாச் சொத்துக்களும் அக்கட்டளையின் தேதியிலிருந்து அரசுக்கு உரித்தாதல் வேண்டும்.

(2) நியமித்த தேதிக்கு முன்னர் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அல்லது ஏதேனும் பிரதேச போக்குவரத்துச் சபையின் அல்லது அத்தகைய சபையின் ஏதேனும் பாகத்தின் பணிகளைக் கையேற்பதற்கென, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க,

பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதற் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, அச்சட்டத்தில் முரணானது, எது எவ்வாறிருப்பினும் —

(அ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கின்ற சபையினது எல்லாப் பொறுப்புகளும் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான சபையின் அத்தகைய பொறுப்புகளும் கட்டளையின் தேதியிலிருந்து அரசுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அரசின் பொறுப்புகளாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(ஆ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கின்ற, சபையால் செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான சபையின் அத்தகைய ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் கட்டளையின் தேதியிலிருந்து அரசினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளுமாகக் கருதப்படல் வேண்டும்;

(இ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று முடிவுறாதிருப்பவையான சபையால் அல்லது சபைக்கெதிராகத் தொடரப்பட்ட எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான சபையினால் அல்லது சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட அத்தகைய வழக்குகளும் அல்லது வழக்கு நடவடிக்கைகளும் அரசால் அல்லது அரசுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகள் வழக்கு நடவடிக்கைகள் எனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அவை கொண்டு நடாத்தப்பட்டு நிறைவாக்கவும் படலாம்;

(ஈ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருக்கின்றதான சபையால் அல்லது சபைக்கெதிராகத் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்துடன் தொடர்புடையவாறான சபையால் அல்லது சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட எவையேனும் அத்தகைய வழக்குகளில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் நீதிமன்றத்தால் அல்லது நியாய சபையினால் பதியப்பட்டவையும் அல்லது ஆக்கப்பட்டவையுமான பணக்கொடுப்பனவு தொடர்பான ஏதேனும் தீர்வை அல்லது நடுத்தீர்வை அரசுக்குச் சார்பான அல்லது அரசுக்கு எதிரான ஒரு தீர்வை அல்லது நடுத்தீர்வை எனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அவை அதற்கிணங்க வலுப்படுத்தவும்படலாம்;

(உ) கட்டளையின் தேதிக்கு முந்திய நாளன்று சபையின் நோக்கங்களுக்கென அல்லது கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட பாகத்தின் நோக்கங்களுக்கெனப் பயன்படுத்தப்பட்ட எல்லா அசைவற்ற ஆதனங்களும் கட்டளையின் தேதியிலிருந்து அரசுக்கு உரித்தாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தி மூன்றும் ஆண்டின் 44ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

மோட்டார் வாகனச் சட்டத்திற்கான திருத்தம்.

47. மோட்டார் வாகனச் சட்டமானது, இச்சட்டத்திற்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முறையில் திருத்தப்படுகிறது.

நிலைமாறு கால ஏற்பாடு.

48. குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றினுள் வரும் ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் 1983 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருப்பதுமான படி நிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒவ்வொன்றும், முதற் குறிப்பிட்ட இடப்பரப்புத் தொடர்பில் 24ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒரு பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் எனக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

49. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினலன்றி—

"அதிகாரமளிக்கப்பட்ட ஆள்" என்பது வெவ்வேறு பயணக் கட்டணங்களில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வசுவண்டி ஒன்றை அத்தகைய அனுமதிப்பத்திரம் அல்லது அதிகாரமளிப்புத் தொடர்புபடுத்துகின்ற இடப்பரப்புக்குள்ளாக, பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கும் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றை அல்லது அதை ஒத்த அதிகாரமளிப்பு ஒன்றை வழங்குவதற்கு நியமித்த தேதியன்று எழுத்திலான சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவரான எவரேனும் ஆள் எனப் பொருளாகும்;

"இருநோக்க வாகனம்" என்பது பிரயாணிகளையும் அத்துடன் பொருட்களையும் ஏற்றிச் செல்வதற்கென வடிவமைக்கப்பட்ட வாகனம் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது அரசியலமைப்பின் 44ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்டவரும் போக்குவரத்து என்னும் விடயம் குறித்தொதுக்கப் பெற்றவருமான அமைச்சர் எனப் பொருள்படும்;

"வசுவண்டி" என்பது மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் ஒரு வசுவண்டியாகப் பதிவுசெய்யப்பட்ட ஒரு மோட்டார் வண்டி எனப் பொருளாவதுடன் இரு நோக்க மோட்டார் வாகனம் ஒன்றை உள்ளடக்குவதாகவும் கருதப்படல் வேண்டும்;

"மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பெனி" என்பது, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அல்லது ஒரு பிரதேச போக்குவரத்துச் சபையின் பணிகளை அல்லது பணிகளின் பாகத்தைப் பொறுப்பேற்பதற்காக 1987ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசுக்கு உரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்புமுயற்சிகளை பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றும் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஒரு கம்பெனி எனப் பொருளாகும்;

"வெவ்வேறு கட்டணம்" என்பது ஆளொருவரால், அவர், வசுண்டியொன்றில் பிரயாணியொருவராக ஏற்றிச் செல்லப்படுவதற்கு உரித்துடையவராவதற்கெனச் செலுத்தப்படும் ஒரு கட்டணம் எனப் பொருளாகும்;

"குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு" என்பது நியமித்த தேதியன்று எத்தகைய இடப்பரப்பு தொடர்பில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வசுவண்டி ஒன்றைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கும் பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றை அல்லது வேறு அதிகாரமளிப்பு ஒன்றை வழங்குவதற்கு எழுத்திலான சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவரான ஆள் இல்லையோ, அத்தகைய இடப்பரப்பு எனப் பொருளாகும்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

50. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை

(பிரிவு 47)

### மோட்டார் வாகனச் சட்டத்திற்கான திருத்தங்கள்

1. அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலம்,

2. அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில்—

(1) உட்பிரிவு (1) இன் பந்திகள் (அ), (ஆ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம்:—

"(அ) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒரு பயணப் போக்குவரத்துச்சேவை அனுமதிப்பத்திரம்; அல்லது;"

(2) உட்பிரிவு (2) இன் பந்திகள் (அ), (ஆ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம்:—

"(ஆ) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம்ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒரு பயணப் போக்குவரத்துச்சேவை அனுமதிப்பத்திரம் அல்லது;"

3. அச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம்:—

"(1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒரு பயணப் போக்குவரத்துச்சேவை அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் பதிவு செய்யப்பட்ட உடைமையாளரின் ஒரு வசுவண்டி தவிர, இப்பாகத்தின் கீழ் வசுவண்டி உரிமம் எதுவும் வழங்கப்படலாகாது;"

4. அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஈ)யை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம்:—

"(ஈ) பிரிவு 31 இன்கீழ் விதித்துரைக்கப்பட்ட உரிமக் கட்டணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்;"

5. அச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (இ) இற்கான காப்புரையை நீக்கிவிடுவதன் மூலம்;

6. அச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு தொடக்கம் 51 ஆம் பிரிவுவரையிலான பிரிவுகளையும் (இரண்டு பிரிவுகளும் உட்பட) அத்துடன் 54, 57, 60, 61 மற்றும் 64 ஆம் பிரிவுகளையும் நீக்கிவிடுவதன்மூலம்;

7. அச்சட்டத்தின் 75 ஆம் பிரிவில் "கட்டணத்திற்கு அல்லது வெகுமதிக்கு" என்ற சொற்கள் எவ்விடங்களில் வருகின்றனவோ அவ்விடங்களில் அச்சொற்களுக்குப் பதிலாக "வெவ்வேறு பிரயாணக் கட்டணங்களில்" என்ற சொற்களை இடுவதன்மூலம்;

8. அச்சட்டத்தின் 182 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஒரு பரிசோதகரால் அல்லது ஒரு பொலிசு அலுவலரால்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஒரு பரிசோதகரால், பொலிசு அலுவலரால் அல்லது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரால்" என்ற சொற்களை இடுவதன் மூலம்;

9. அச்சட்டத்தின் 183 ஆம் பிரிவில் "ஒரு பொலிசு அலுவலரால்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஒரு பொலிசு அலுவலரால் அல்லது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரால்" என்ற சொற்களை இடுவதன்மூலம்;

10. அச்சட்டத்தின் 185 ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன்மூலம்:—

"வசுவண்டியில் நடாத்துநர் ஒருவர் இருக்குமிடத்து ஏற்பாடு.

185. ஏதேனும் பெருந்தெருவில் பயன்படுத்தப்படும் ஒரு வசுவண்டியில் நடாத்துநர் ஒருவர் இருக்குமிடத்து, அந் நடாத்துநர் அவருடைய உடுப்பின் துலாம்பரமான ஒரு பகுதியில் "நடாத்துநர்" என்ற சொல்லைத் தெளிவாகக் குறிப்பிட்டு, அல்லது "நடாத்துநர்" என்ற சொல் தெளிவான எழுத்துகளில் பொறிக்கப்பட்ட ஓர் உலோகப் பட்டியைத் துலாம்பரமான நிலையில் அணிந்து இருத்தல் வேண்டும்.".

11. அச்சட்டத்தின் 189 ஆம் பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம்:—

"(3) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பொருட்களையும் பயணிகளையும் ஏற்றிச் செல்வதற்காக இருநோக்க மோட்டார் வாகனமாகப் பயன்படுத்தப்படும் ஒரு லொறிக்கு இப்பிரிவிலுள்ள எதுவும் ஏற்புடையதாதல் ஆகாது;"

12. அச்சட்டத்தின் பிரிவுகள் 239, 239அ, 239ஆ என்பவற்றை நீக்கிவிடுவதன் மூலம்;

13. அச்சட்டத்தின் 240 ஆம் பிரிவில்—

(1) "மோட்டார் வாகனம்" என்ற வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம்:—

'"தேசிய போக்குவரத்து ஆணைக்குழு" என்பது, ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எனப் பொருளாகும்."

(2) "வசுவண்டி" என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் :—

'"வசவண்டி" என்பது ஒரு வசுவண்டியாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் வண்டி எனப் பொருளாவதுடன் இரு நோக்க மோட்டார் வாகனம் ஒன்றை அது உள்ளடக்குவதாகவும் கருதப்படல் வேண்டும்;'

(3) "பிராந்திய போக்குவரத்துச் சபை" அத்துடன் "இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை" என்ற வரைவிலக்கணங்களை முறையே நீக்கிவிடுவதன்மூலம்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.